ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை

பரிதாபி
ஆடி

AUGUST
1972

தொகுதி 34
பகுதி 8

Vol. 34
No 8

ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5 -

Annual
Subscription
Rs. 5/-

சிறுமைப்படுத்தும் திட்டங்கள் ... 145

ஆரோக்கிய கல்பத்துருமம் ... 147

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ 27
(ஆபீஸ்) போன் நெ 61
மானேஜர் (வீடு) போன் நெ. 26

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
பிரைவேட் லிமிடெட்
(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பது ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

ஸௌபாக்கிய ரஸாயனம்

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்,
300 கிராம் பாட்டில் ரூ. 5.

பயஸ்யா

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M|s. Kalia Brothers (Regd.)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram: KALIA

Phone: **Office - 3232**
Resi. - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு
அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,
ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி: KALIA

போன்: ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி : "அம்ருதம்" P. B. No. 1382. போன் : 26006

தி ஆர்ய வைத்திய பார்மஸி
(கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ் : 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD — AVP

உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்

எங்களுடைய கிளைகள் :

1.	23-B, பூஸா ரோடு, புது டில்லி-5	போன் : 585687
2.	மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,, 2984
3.	கௌடியா மடத்தெரு, மதராஸ்-14	,, 85752
4.	வளிஞ்ஞும்பலம், எர்ணாகுளம், கொச்சின்-16	,, 32336
5.	பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1	,, 92
6	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,, 195
7.	கடைவீதி, பொன்னானி	,, 41
8.	ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1.	,, 378
9.	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,, 87
10	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு	
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18	33758
12.	இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2	,, 4891
13.	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2	842
14.	No. 263. 64. 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி)	31
15.	ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1	

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18
(போன் ; 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 34	பரிதாபி ஆடி	பகுதி 8
Vol. 34	1972 ஆகஸ்ட்	No. 8

श्री धन्वन्तरये नमः

சிறுமைப்படுத்தும் திட்டங்கள்

கிராமங்களில் சுகாதாரப் பாதுகாப்பிற்கும் மருத்துவ உதவிக்கும் தக்க தேர்ச்சிபெற்ற டாக்டர்கள் கிடைப்பதில்லை என்றொரு குறை வெகுநாட்களாக இருக்கிறது. ஓரிடத்தில் அதிகாரங்கள் குவியக்கூடாதென்று அவைகளைப் பரவலாக்கும் பல்வேறு அரசியல் திட்டங்கள் ஏட்டளவில் நின்றுவிடுகின்றன. அதிகாரங்களைக் குவித்துத் தம்மிடம் வைத்திருப்பவர்கள் பேச்சளவில் தவிர உண்மையில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புவதில்லை அதேபோல வைத்திய வசதியும் மாவட்டத் தலைநகர், ராஜ்யத் தலைநகர் போன்ற முக்கிய ஸ்தானங்களில் குவிந்து நிற்கின்றனவே தவிர பரவலாக்கப் பெறவில்லை 5000 படுக்கை வசதி உள்ள ஆஸ்பத்திரியை ஓரிடத்தில் வைப்பதைவிட 500 படுக்கை வசதிகள் உளள 10 ஆஸ்பத்திரிகளைப் பத்து இடங்களில் நிறுவுவதைப் பற்றிச் சிந்திக்கவில்லை. 5000 மக்கள் தொகைக்கு ஒரு ஆஸ்பத்திரி என்ற திட்டம் நிறைவேற மக்களும் அரசாங்கமும் ஓரிடத்தில் குவியும் திட்டத்தை மாற்றிக்கொள்ளவேண்டும்

கிராம மக்கள் தற்போது நகரமக்களைவிட வைத்திய வசதிக்காக அதிகம் பணம் செலவழிக்கத் தயாராகி உள்ளதை

நகரில் உள்ள டாக்டர்களிடம் அவர்கள் பணச் செலவைப் பொருட்படுத்தாமல் சிகித்சைபெற வருவதிலிருந்து அறியலாம். ஆகவே நல்ல தேர்ச்சிபெற்ற டாக்டர்களையே கிராமங்களில் சென்று தங்க ஏற்பாடுசெய்வது தான் நல்லது. அதற்கு ஒருவழி ஆஸ்பத்திரிகளைப் பரவலாகப் பிரித்துவைப்பதே.

கிராம மக்களுக்கெனத் தரக்குறைவான வைத்யர்கள் போதும் என்று கூறும் நிபுணர்களும் அரசியல்வாதிகளும் காணப் பெறுகின்றனர். நல்ல தேர்ச்சிபெருத டாக்டர்கள் கிராமங்களில் தங்க விரும்பாததால், வைத்யத்தொழிலில் தனி டாக்டரிடமோ ஆஸ்பத்திரிகளிலோ உதவியாளராக இருந்து ஒரளவு மருந்துக்கும் நோய்க்கும் உள்ள தொடர்பறிந்தவர்களை 6-7 மாதம் தொழிற் பயிற்சிகொடுத்து டாக்டர் அந்தஸ்துடன் அவர்களைத் தொழில் புரியச் சொல்லலாம் என்ற திட்டம் இன்று பரவலாகப் பேசப்படுகிறது. இதனுல் கிராம மக்கள் நல்ல தேர்ச்சிபெற்ற டாக்டர்களின் சிகித்ஸைபெறத் தகுதியற்றவர்கள் என்ற சிறுமைக்கு ஆளாகக்கூடும். ஜனநாயகத்திற்குச் சற்றேனும் ஒவ்வாத ஒரு திட்டமிது.

மற்ருென்று கிராமங்களில் அதிக அளவில் வைத்ய உதவி புரிந்துவரும் நாட்டு வைத்யர்களுக்கு நவீன சிகித்ஸை முறையில் 6-7 மாதம் பயிற்சிகொடுத்து அவர்களை கிராம டாக்டர்களாக்கு வதென்று யோசனையும் அத்தகையதே இதில் நாட்டு வைத்யமும் சிறுமைப்படுத்தப்பெறுகிறது.

நாட்டு வைத்ய முறையை நல்ல கல்வி ஸ்தாபனங்கள் மூலம் கற்பித்துத் தொழிற் பயிற்சி தந்து நல்ல தேர்ந்த வைத்யர்களை உண்டாக்குவது தான் முன்னேக்குள்ள நாட்டின் திட்டமாக இருக்கவேண்டும். இதுவரை நடந்துவந்த வழியை அப்படியே ஏற்றுக்கொள்ளுமளவிற்குத்தான் இந்தப் பதிவுமுறை (பி.க்ளாஸ்) ஏற்றதே தவிர, இதைத்தொடர்ந்து அனுமதித்துத் தரக் குறைவான வைத்ய வசதியைச் சமூகத்திற்கு அளிப்பதற்கல்ல. கிராம வைத்யம் தரக்குறைவானவர்களால் நிர்வகிக்கக்கூடிய தல்ல. ஸாதனப்பெருக்கற்ற சூழ்நிலையில் தொழில் புரியவேண்டிய கிராம வைத்யர்கள் அதிக சக்திவாய்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும். நாட்டு வைத்யக் கல்லூரிகளை அதிகம் ஏற்படுத்திக் கல்வித் தரத்தையும் சீர்படுத்தி நல்ல வைத்யர்களை வரும் தலைமுறைக்காவது தரும் திட்டம் இன்றே செயல்படவேண்டும். நாட்டு வைத்யத்தையும் கிராம மக்களையும் சிறுமைப்படுத்தும் இந்த தற்காலிக அவல திட்டங்கள் தேவை இல்லை. செய்வதைத் திருந்தச் செய்வோம்.

ஆரோக்கிய கல்பத்துருமம்

சீதபித்தம்

பித்தமும் கபமும் சேர்ந்து கோபமடைந்து உடல் முழுதும் விருத்த உருவில் அரிப்புடனுள்ள பல தடிப்புகளை உண்டாக்கும். இதை சீதபித்தம் என்பர்.

சிகித்ஸை: நன்னாரிக்கிழங்கு, கோஷ்டம், சந்தனத்தூள் இவைகளைப் பாலில் அரைத்துத் தேய்க்கவும் அல்லது தாமரை கேஸரம், அருகம்புல், தேற்றாங்கொட்டை, சந்தனம் இவைகளைப் பாலில் அரைத்துத் தேய்க்கலாம். உடல் பலத்தைக் கவனித்து மல சுத்திக்கு அவிபத்தி சூர்ணமும் விஸர்பத்தின் பொது சிகித்ஸையும் இங்கு செய்யலாம்.

வரள் மஞ்சள், வேப்பன் பட்டை, புத்தரிச்சுண்டை வேர் மேல் தோல், காஞ்சூரி வேர், சீந்திற்கொடி, சந்தனத்தூள், கடுக்காய் தோல் இவைகளின் கஷாயத்தைச் சர்க்கரை சேர்த்து சாப்பிடலாம்.

தண்ணீர்விட்டான் கிழங்கு, அருகம்புல், விருச்சிப்பூ இவைகளின் சாறு; கோஷ்டம், சந்தனத்தூள், அதிமதுரம், வாழைப் பழம் இவை கல்கம். நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்; எண்ணெய்க்கு சமம் பசுவின் பால் இவைகளைத் தைலம் காய்ச்சி ஸ்னானம் செய்விக்கவும்.

கக்ஷயாஸ்போடம்: சரீரத்தின் விலாப்புறத்திலும் மார்பிலும் முதுகிலும் பொரிபோன்று கொப்புளங்கள் ஏற்பட்டுப் பரவுவது கக்ஷயாஸ்போடம் எனப்படும்.

சிகித்ஸை: சந்தனத்தையும் காவி மண்ணையும் தேங்காய்ப் பால் விட்டரைத்துப் பூசலாம் சீந்திற்கொடி சந்தனத்தூள், விலாமிச்சை வேர் இவைகளை தேங்காய்ப்பாலில் அரைத்துப் பூசலாம். பித்த விஸர்பத்திலுள்ள எல்லா சிகித்ஸையும் ஏற்றதே.

தழும்பு: மஞ்சள் காவி மண், யானைத் தந்தம் இவைகளின் தூளைத் தேன்விட்டரைத்துப் பூச தழும்புகள் மறையும். தனி யானைத் தந்தத்தையே தேனில் இழைத்துப் பூசலாம்.

தோல் சுத்தமாக: கொம்பரக்கு, மனோசிலை, கோஷ்டம், பொன்னரிதாரம், வரள் மஞ்சள், மரமஞ்சள், மஞ்சிட்டி இவைகளின் தூளைத் தேனும் நெய்யும்விட்டுக் குழப்பிப் பூசிவிடலாம். கொம்பரக்கு, கோரைக்கிழங்கு, அதிமதுரம், மஞ்சிட்டி இவைகளின் சூர்ணமும் நல்லது தனி மஞ்சிட்டியையும் தூள் செய்து பூசலாம். தோல் நன்கு சுத்தமாகி நோயற்று விளங்கும்.

குஷ்டம்

குஷ்ட நோய்க்கு சிகித்ஸை செய்யும்போது காணப்படும் குறிகளுக்கேற்ப வாதாதிகளின் தாரதம்யத்தை உணர்ந்து வலியும் தோலில் உணர்ச்சியின்மையும் வாதத்தையும, தோலில் எரிச்சலும் சிவப்பும் பித்தத்தையும், மயிர்க் கூச்சமும் அரிப்பும் கபத்தையும் குறிப்பிடுவதாக அறிந்து சிகித்ஸை செய்யவேண்டும்.

பொதுவான சிகித்ஸை: கருங்காலியையோ வரள் மஞ்சளையோ துளசிச் சாற்றில் அரைத்துப் பூசலாம். திக்தககிருதம், மஹாதிக்தககிருதம் இவைகளைக் கொடுத்துக் கொண்டு அவிபத்தி சூர்ணத்தால் மலமிளக்கிக் கொள்ளலாம். சீந்திற்கொடி, வேப்பம்பட்டை, காஞ்சூரிவேர், மரமஞ்சள், கருங்காலி, பேய்ப் புடல் இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிடலாம். திரிபலை, கருங்காலிக்கட்டை, கார்போகரிசி, வேப்பம்பட்டை, பேய்ப்புடல், பிரமி, திரிகடு இவைகளின் கஷாயம் நல்லது.

மாணிபத்ரகுளம்: வாய்விளங்கம், நெல்லிமுள்ளி, கடுக்காய் இவை வகைக்கு 30 கிராம்; செவதைவேர் 30 கிராம் இவைகளைத் தூள் செய்து 80 கிராம் வெல்லம் சேர்த்து இடித்துச் சிறிய சிறிய வடகங்களாக்கிக் கொள்ளவும். தினம் காலையில் இதைச் சாப்பிட எல்லா குஷ்டங்களும், வெண்குஷ்டம், ச்வாஸம், காஸம், உதரம், மூலம், பிரமேகம், ப்லீஹம், கிருமி, குல்மம், கிரந்தி, மலபந்தம், இவைகளைப் போக்கும்.

நீலீநிசாதிதைலம்: அவுரி இலை, மஞ்சள், வெம்பாடம்பட்டை, அடபதியன் கிழங்கு, பேய்ப்புடல், கையாந்தரை, சிறுபுள்ளடி, புலிச்சுவடு, நாயுருவி, அருகம்புல் இவைகளின் சாறு 4 லிட்டர் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் ஒரு லிட்டர் கோஷ்டம், மஞ்சிட்டி, ஸரளதேவதாரு, விலாமிச்சைவேர், சந்தனத்தூள், ஏலரிசி, வாய்விளங்கம், புன்னைப்பூ, சிறுநாகப்பூ, திரிபலை, குந்துருக்கம், வரள்மஞ்சள், மரமஞ்சள் தோல், ஞாழல்

பூ இவை வகைக்கு 3 கிராம் இவைகளைத் தைலமாகக் காய்ச்சித் தேய்த்து ஸ்நானம் செய்ய விசர்ச்சிகை, விஸ்போடம், விஸர்ப்பம், குஷ்டம் போகும்.

ராஜவல்காதிதைலம் : சரக்கொன்னைப்பட்டை அல்லது வேர் பட்டை 400 கிராம், கருங்காலி வைரம் 50 கிராம், விருச்சி வேர் 25 கிராம், காட்டுமுல்லை வேர் 133 கிராம், திரிபலை 80 கிராம் இவைகளை 5 லிட்டர் ஜலத்திலிட்டு கஷாயமிட்டு கால்பங்கு மீதமானதும் வடிகட்டிக் கொள்ளவும். கோஷ்டம், தாளகம், தேவதாரு, நீர்வஞ்சி, அம்பாடங்காய், கடம்பப்பட்டை, பாம்புத் தோல், குக்கில், நன்னாரி, அதிமதுரம், மஞ்சிட்டி, சந்தனம், ஏலரிசி, கல்நார், தும்மட்டிவேர், சிறுநாகப்பூ, மஞ்சள், கச் சோரம், லிங்கம், ஞாழல்பூ, ஆமைஓடு, குந்துமணி, பவழம், சங்கு, வாலுளுவை, சோழி, கார்போகரிசி, முள்ளிலவம்பட்டை, அபின், கரப்பான்பட்டை, முருங்கைப்பட்டை, அழிஞ்சில்விதை, ஊமத்தம்பூ அசோகப்பட்டை, குங்குமப்பூ, பூரம், புன்னைப்பூ, தூணியாங்கம், யானை எலும்பு, இரும்புத்தூள், அன்னபேதி, தாம்ரத்தூள், கந்தகம் இவை எல்லாம் சேர்த்து 60 கிராம் கல்கம் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் 250 மி. லிட்டர் சேர்த்துக் காய்ச்சிய தைலம் மேல் தேய்க்க எல்லா குஷ்ட நோய் களும் நீங்கும்.

திரிபலாத்ரயாதி குளிகை : கடுக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, தான்றிக்காய்த்தோல், நீரடிமுத்து, சேங்கொட்டை, வேட்பாலை யரிசி, வாய்விளங்கம், வாலுளுவை, கார்போகரிசி, விருச்சிவேர் பட்டை, கொடிவேலி வேர், மஞ்சள் இவைகளை வகைக்குச் சம எடை சேர்த்துக் கருசலாங்கண்ணிச் சாற்றிலரைத்து கழற்சிக் காய் அளவு மாத்திரை செய்து தேனுடன் சாப்பிட குஷ்டநோய் அகலும்.

குஷ்டாந்தகவடி : நூறுவயதான வேம்பின் காய், பூ, பட்டை இலை, வேர், கல்மதம், தாளகம், கருங்காலிவைரம், வங்க பஸ்மம், மிளகு, கார்போகரிசி இவை ஸம எடை எடுத்து மூன்று நாள் கருசலாங்கண்ணிச் சாற்றிலும் மூன்று நாள் சரக்கொன்னைப் பட்டைக் கஷாயத்திலும் ஐந்து நாள் விருச்சிவேர் கஷாயத்திலும் ஏழுநாள் கருங்காலி வைர கஷாயத்திலும் எட்டுநாள் வாலுளுவை கஷாயத்திலும், எட்டுநாள் மருதம்பட்டை கஷாயத்திலும் அரைத்து இலந்தைக்கொட்டைப் பிரமாணம் மாத்திரை உருட்டி நிழலிலுலர்த்தித் தேனுடன் சாப்பிட நல்லது. பேடர் கூறியது குஷ்டத்திற்கு நல்ல மருந்து.

வாத குஷ்டத்தில்: தேவதாரு கருங்குறிஞ்சி வேர், கொன்னை வேர்பட்டை, கச்சூரக்கிழங்கு, மூக்கரட்டை, பேய்ப்புடல், கருங் காலிவைரம் இவைகளின் கஷாயம் சாப்பிட நல்லது

பலாஹரித்ராதி தைலம்: சிற்றுமுட்டிவேர், விரலிமஞ்சள், தேவதாரு, நன்னாரிவேர், வேங்கை வைரம் இவைகளின் கஷாயம். வாய்விளங்கம், மஞ்சிட்டித்தூள், திரிபலை, திரிகடு, நன்னாரிவேர், புங்கம்பட்டை, தும்மட்டிவேர், குக்கில், அதிமதுரம், நெல்லிக்காய் இவைகளை அரைத்துக் கல்கம், தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் இதைத் தைலமாக்கிக் காலையில் தேய்த்துக் குளிக்கவும், கஷாயம் முதலியவைகளுடன் உள்ளுக்குச் சாப்பிடவும் நல்லது.

பித்த குஷ்டத்தில்: திராக்ஷை, அதிமதுரம், மஞ்சிட்டி. நன்னாரிவேர், கருங்காலி வைரம், கோரைக்கிழங்கு, கொன்னை வேரின் மேல் பட்டை, வெட்பாலையரிசி, இவைகளைக் கஷாயம் வைத்து குஷ்டஹரமான நெய்களுடன் சாப்பிட நல்லது.

ஸவர்ணகரணநெய்: விருச்சிப்பூவின் கல்கம், விருச்சிப்பூச் சாறு இவைகளைக்கொண்டு தயாரித்த நெய் பித்த குஷ்டத்தில் தோல் நிறமாறுதலைப் போக்க வல்லது.

கோபீகந்தாதி தைலம்: நன்னாரிக்கிழங்கின் கஷாயம்; கருங் காலிவைரம், விலாமிச்சைவேர், கச்சோரம், கோரைக்கிழங்கு, அதிமதுரம் - இவை கல்கம், தேங்காய் எண்ணெய்; இவைகளைக் காய்ச்சித் தேய்த்து ஸ்நானம் செய்யவும் உள்ளுக்குச் சாப்பிடவும் நல்லது

கப குஷ்டத்தில்: பேய்ப்புடல், கருங்காலிவைரம், வேப்பம் பட்டை, காட்டுவெள்ளரிவேர், கடுகுரோகிணி, சுக்கு இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது.

விசாலாதி தைலம்: தும்மட்டிவேர், கருங்காலிக்கட்டை, கோஷ்டம், அதிமதுரம், தாளகம், விரலிமஞ்சள் - இவைகளை அரைத்துக் கலக்கித் தேங்காய் எண்ணெய்யோ, நல்லெண் ணெய்யோ சேர்த்துக் காய்ச்சித் தேய்த்துக்கொள்ள கபகுஷ்டம் நீங்கும்.

வாதபித்த—வாதகப—கபபித்த குஷ்டங்களிலும் ஸந்நிபாத குஷ்டத்திலும் அந்த அதிகாரத்தில் கண்ட விஸர்ப்பசிகித்ஸை நல்லது.

விரணசுத்திக்கு: அருகம்புல், பசுமஞ்சள், வேப்பிலை அல்லது மஞ்சள், எள்ளு, வேப்பிலை இம்மூன்றையும் அரைத்துத் தேனும் நெய்யும் சேர்த்துக் குழப்பி கெட்ட புண்மேல் பூசிக்கட்ட விரணம் சுத்தமாகும், ஆறும்.

கிருஷ்ணேபகுஞ்சிகாதி சூர்ணம்: திப்பிலி, கருஞ்சீரகம், ஜாதிக்காய், ஏலரிசி, சிற்றேலம், அதிமதுரம் இவை வகைக்கு 10 கிராம், திரிபலை 60 கிராம், கார்போகரிசி 60 கிராம், பரங்கிப் பட்டை 180 கிராம், விருச்சிப்பூ 360 கிராம். இவைகளை இடித்துத் தூள் செய்து தேனும் நெய்யும் கூட்டி அல்லது ஸவர்ணகரண கிருதத்துடன் சாப்பிட குதகுஷ்டம் போகும்.

பாத குஷ்டத்தில்: வரள் மஞ்சள், மாவின் பிசின், தேன் மெழுகு இவைகளை அரசம்பால் விட்டரைத்துப் பூச, பாத குஷ்டம் விலகும்.

பலாசவல்காதிக்குழம்பு: புரசம்பட்டை, திரிபலை இவைகளைக் கஷாயமிட்டு அத்துடன் எருக்கிலைச்சாறு, விருச்சிப்பூவின் சாறு, கருமுருங்கிலைச்சாறு, ஆனையடியன் சாறு இவைகளையும் சம அளவு சேர்த்து அதில் பசுவின் சாணமும் மூத்திரமும் சாம்பிராணியும் சேர்த்து அரைத்துக் கெட்டியானதும் மேல் பூச பாத குஷ்டம் தணியும்.

சேற்றுப்புண்ணில்: காலில் வரும் சேற்றுப்புண்ணுக்கு மர மஞ்சள் தோல், அடபதியன் கிழங்கு, மஞ்சிட்டித்தூள், துத்தம் இவைகளை ஜலத்தில் அரைத்துக் கலக்கி நெய்யும், கம்பிப்பாலைப் பாலும் சேர்த்துப் பூச நல்லது.

கருப்பு மான்தோலைச் சாம்பலாக்கி வெண்ணெய்யில் குழப்பிப் பூசலாம். கசப்புச் சுரைக்காய்ச் சாற்றுடன் வெண்ணெய் சேர்த்துப் பூசலாம்.

இந்துப்பு, திரிபலை, கோவைக்கிழங்கு, வாழைப்பழம், வஞ்சிப் பட்டை இவைகளை தேங்காய்ப்பாலும் எருமை வெண்ணெய்யும் சேர்த்தரைத்துப் பூச சேற்றுப்புண், பித்தவெடிப்பு, உள்ளங்கால் எரிவு இவைகளைப் போக்கும்.

நால்பால் மரப்பட்டை, இந்துப்பு, வாழைப்பழம் இவைகளை எண்ணெய் சேர்த்தரைத்துப் பூசலாம்,

கஜசர்மத்தில்: கருஊமத்தைச்சாறு விட்டு பலாப்பட்டையையோ, ஆலம்பட்டையையோ அரைத்துப் பூச யானைத்தோல் போல் தடித்த தோல் கனம் குறையும். கொன்னைப்பட்டை, கசப்புச்சுரை வேர், நால்பால் மரப்பட்டை இவைகளின் கஷாயத்தில் அதிமதுரம், நன்னாரிவேர், மாகாளிக்கிழங்கு, விருச்சிவேர் இவைகளைக் கல்கமாக்கி விருச்சிப்பூவின் சாறும் ஆனையடியன் சாறும் பசுவின்பாலும் ஸமம் சேர்த்துக் காய்ச்சிய நெய் மேலுக்குத் தடவ நல்லது. காலையில் திக்தக கிருதத்துடன் பரங்கிப்பட்டைச் சூர்ணத்தைச் சாப்பிடலாம். முன் கூறப்பட்டுள்ள கிருஷ்ணைப குஞ்சிகாதி சூர்ணமும் நல்லது.

பிந்து குஷ்டத்தில்:

வெங்காரத்தை அனலிலிட்டுக் காய்ச்சி எலுமிச்சம்பழச்சாற்றிலிட்டு சந்தனக்கட்டை கொண்டு அரைத்து சந்தனத்துடன் சேர்த்து பிந்து குஷ்டத்தின் மேல் பூசி உலர்ந்தது, தேய்த்து மோர் விட்டலம்பிவிடவும்.

பூசனிக்கொடியைச் சுட்ட சாம்பலை கோமூத்ரத்தில் குழைத்துப் பூசி உலர்ந்ததும் எருமைச் சாணத்தைப் போட்டுத் தேய்த்து அலம்பவும்.

ஞாழல் பூ, வெற்றிலைத் துளிர், சிறுநாகப்பூ, முருங்கை விதை, தகர விதை, பொன்னுவாரையிலை இவைகளை மோரில் அரைத்து பூசி, உலர்ந்ததும் தேய்த்து உதிர்த்து எடுக்கவும்.

கந்தகத்தையோ சந்தனத்தையோ வசம்புடன் சேர்த்து மோர்விட்டரைத்து மேல் பூசி உலர்ந்ததும் தேய்த்துவிட நல்லது.

சங்க பாஷாணத்தையும் சந்தனத்தையும் எலுமிச்சம்பழச் சாறுவிட்டரைத்து மேல் பூசலாம்.

சிலா குஷ்டத்தில்:

பொன்னுவாரை விதையை கள்ளியிலைச் சாற்றிலரைத்துப் பூசலாம். புகைக்கரியை அல்லது வெல்லத்தையும் சித்ர மூலத்தையும் அல்லது அன்னபேதியையும் கடுக்காயையும் கள்ளியிலைச் சாற்றிலரைத்துப் பூசலாம். கடலாமணக்கிலைப்பாலில் யானைக்கொம்பையோ, அன்னபேதியையோ, எருக்கம் பழுப்பையோ, தாளகத்தையோ துத்தத்தையோ அரைத்துப் பூசலாம்.

பழுத்து வெடித்து வடியும் குஷ்டத்தில் ரத்த சுத்திக்கும், புண் ஆறுவதற்குமான பொதுவான விரண சிகித்ஸையைச் செய்யலாம்.

வெண்குஷ்டத்தில் :

சசிரேகா ரஸாயனம்: வேங்கை வைரம், அகில், தேக்கின் தோல், தானிக்காய்த் தோல், மருதம்பட்டை, சரக்கொன்னைப் பட்டை, பேய்த்தும்மட்டி வேர், நன்னாரி வேர், மருள் வேர், பதிமுகம் இவைகளின் தனித்தனி கஷாயத்திலும், கையாந்தரை, கருநொச்சி, மஞ்சள், நெல்லிக்காய், வல்லாரை, சீந்திற்கொடி இவைகளின் தனித்தனி ஸ்வரஸத்திலும் ஒவ்வொரு நாள், தினம் இரவு பாவனைசெய்து பகலில் உலர்த்தி எடுத்த கார்போகரிசியைச் சூர்ணம் செய்து நெய் சேர்த்துச் சாப்பிட ஒரு மாதத்தில் வெண் குஷ்டம் விஸர்பம் கிருமிகள் மறையும்.

மேல் பூசுவதற்கு: வெண்ணெய்யில் புலித்தோல் அல்லது யானைத்தோல் கரியைக் குழைத்துப் பூசலாம். கந்தகம் ஒட்டடை, குந்துமணி, பேய்ப்பீர்க்கின் விதை, மஞ்சள், கார்போகரிசி இவைகளைத் தூள் செய்து வெண்ணெய் அல்லது நெய்யில் குழப்பிப் பூச நல்லது.

கொடிவேலி வேர், கார்போகரிசி, இவைகளைச் சூர்ணம் செய்து நெல்லிக்காய்ச் சாற்றுடன் குழப்பி கருங்காலிக் கட்டை கஷாயம் அனுபானமாகச் சேர்த்துச் சாப்பிடலாம்.

திக்தகிருதம் மஹாதிக்தகிருதம் முதலிய குஷ்ட சிகித்ஸைக்கான மருந்துகளும் நல்லது.

1972 மஹாமண்டலச் சந்தா

சந்தா ரூபாய் ஐந்தை அனுப்பிவிட்டீர்களா?

ஆகஸ்டு மாதத்திற்குள் சந்தாவை அனுப்பக் கோருகிறோம். அனுப்பாதவர்கள் வி. பி. பி. யில் அனுப்பப் பெறும் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளக் கோருகிறோம்.

A. ராகவராவ், காரியதரிசி.

வாத வியாதி சிகித்ஸை

வாதத்தால் விகிருதி அடைந்த அங்கங்களில் சிற்ருமுட்டி கஷாயமும் பாலும் சேர்த்த திரவத்தில் வேகவைத்த அறுபதாங் குருவை அன்னத்தைக் கிழிகட்டித் தேய்க்கலாம். $3\frac{3}{4}$ நாழிகை கழித்து அதை கைபொறுக்கும் சூட்டிலுள்ள வென்னீர் விட்டு அலம்பிக்கொள்ளவும்.

பால் சேர்த்து சிற்ருமுட்டி வேரைக் கல்கமாக்கிச் சேர்த்துத் தயாரித்த தைலமும் நல்லது.

சுத்த பலாதைலம்: நல்லெண்ணெய் ஒரு பங்கு, பசுவின் பால் ஒரு பங்கு, சிற்ருமுட்டிவேர் கஷாயம் 4 பங்கு, சிற்ருமுட்டிவேர் கல்கம் $\frac{1}{4}$ பங்கு சேர்த்துக் காய்ச்சிய தைலம் உள்ளுக்குச் சாப்பிடவும் மேலுக்குத் தேய்க்கவும் நல்லது.

க்ஷீரபலாதைலம்: 600 கிராம் சிற்ருமுட்டி வேரை இடித்து எடுத்த சாறு அல்லது கஷாயம், நல்லெண்ணெய் 640 கிராம், பால் $2\frac{1}{2}$ லிட்டர், சிற்ருமுட்டி வேர் கல்கத்திற்காக 80 கிராம் இவைகளை முறைப்படி தைலமாகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும், வாத வியாதிகளில் நல்லது.

வாதாசனிதைலம்: நல்லெண்ணெய் 640 கிராம், தண்ணீர் விட்டான் கிழங்கு 4 கிலோவை இடித்து $6\frac{1}{4}$ லிட்டர் ஜலத்தில் கால் பங்கு மீதமாகக் கஷாயமிட்டு வடிகட்டிய கஷாயம், கோஷ்டம் சதகுப்பை, தேவதாரு, சந்தனக்கட்டை, ஜடாமாஞ்சி, கல்பாசி, ருத்ராக்ஷம், ஜீவகம், ருஷபகம், மாவிலங்கம்பட்டை, வசம்பு சிற்ரு முட்டி வேர், தகரவிதை, ஏலரிசி, வாய்விளங்கம், ஆவல்பட்டை, புங்கம்பட்டை, ஒரிலைவேர், மூவிலைவேர் வகைக்கு 10 கிராம் இவை கல்கம், பசுவின் பால் $2\frac{1}{2}$ லிட்டர், இவைகளை முறைப்படி தைலமாகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். ச்வாஸம், காஸம், செவிடு, நொண்டி, முடம், நாக்கு ஸ்தம்பம், கிழடு, ஆண்மை யிழத்தல், உடல் இளைப்பு, எலும்பு ஒடிதல் மூட்டுவலி, சினப்புகள் விஸர்ப்பம், அண்டவிருத்தி, நீர்ச் சுருக்கு நீரடைப்பு, கல்லடைப்பு வாதகுண்டலி, பிரமேஹம், மற்ற வாத வியாதிகள் இவைகளில் உள்ளும் புறமும் உபயோகிக்க நல்லது.

மாம்ஸீபலாதிதைலம்: ஜடாமாஞ்சி, குருந்தோட்டிவேர், பேரா முட்டிவேர், ஏலரிசி, லவங்கப்பட்டை தேவதாரு, கடுக்காய்,

சுக்கு. அரத்தை, உளுந்து, அமுக்கராக்கிழங்கு, கோரைக்கிழங்கு, குந்துருக்கம், தகரம் இவைகளைக் கல்கமாகக் குருந்தோட்டிவேர் கஷாயத்தில் (எண்ணெய்க்கு) 4 பங்கு அரைத்துக் கலக்கி, நல்லெண்ணெய்யும் பாலும் ஸம அளவு சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். இதை உள்ளும் புறமும் உபயோகிக்க எல்லா வாத வியாதிகளும் நீங்கும் ஸூர்யாவர்த்தம் ஒற்றைத்தலைவலி நீங்கும்.

பஞ்சாம்லதைலம்: புளி இலையை இடித்துப் பிழிந்தெடுத்த ஸ்வரஸம் 5 பங்கு, தேவதாரு, சதகுப்பை, உப்பு, முருங்கப்பட்டை, சித்தரத்தை, ஸர்ஜரஸம், மஞ்சிட்டி, நன்னாரி இவை கல்கம்; நல்லெண்ணெய் தயிர் காடி இவை ஸம அளவு, தைலம் காய்ச்சியெடுத்துக் கொள்ளவும். ஸர்வாங்கவாதத்தில் மிகவும் நல்லது.

தான்வந்தரதைலம்: சித்தாமுட்டிவேர் கஷாயம் 6 பங்கு, பால் 6 பங்கு, நல்லெண்ணெய் ஒரு பங்கு, யவையரிசி, இலந்தைக் கொட்டை, கொள்ளு, தசமூலம் இவைகளின் கஷாயம் ஒருபங்கு, மேதா, மஹாமேதா (கிடைக்காவிடத்து தண்ணீர் விட்டான் கிழங்கு) அமுக்கராக்கிழங்கு, தகரவிதை சந்தனத்தூள், மஞ்சிட்டி தேவதாரு, காகோலி, க்ஷீரகாகோலி (கிடைக்காவிடத்து அமுக்கராக்கிழங்கு) தண்ணீர்விட்டான் கிழங்கு, மூக்கரட்டைவேர், நன்னாரி கோஷ்டம் அதிமதுரம், ஜீவகம், ருஷபகம் (கிடைக்காவிடத்தில் நிலப்பூசனிக்கிழங்கு) அகில், வாலுளுவை, இந்துப்பு, கல்பாசி, கடுக்காய்த்தோல், தானிக்காய்தோல், நெல்லிமுள்ளி, ஒரிலைவேர், மூவிலைவேர், வசம்பு ஏலரிசி, லவங்கப்படை லவங்கப் பத்திரி, பால் முதுக்கன் கிழங்கு, சதகுப்பை, நெரியரிசிப்பால் இவை கல்கம், (எண்ணெய்க்கு 8ல் ஒரு பங்கு) இவைகளைத் தைலமாகக் காய்ச்சிக்கொள்ளவும், எல்லா வாத வியாதிகளிலும் நல்லது. பிரஸவித்த மாதர், குழந்தைகள் இளைத்தவர், புண் பட்டவர், ஜ்வரம், குல்மம், எலும்புவலி, உன்மாதம், குடல் வாதம், யோனி நோய், நீர்ச் சுருக்கு, உடல்வலி, மர்ம நோய்கள், கிரஹபீடை இவைகளில் நல்லது.

ஸ்ரீருத்ரதைலம்: தசமூலம், சிற்றாமுட்டிவேர், சித்தரத்தை, உளுந்து, பருத்திவிதை, அதிமதுரம், கொள்ளு, மான்தலை ஓடு, தண்ணீர்விட்டான் கிழங்கு, தேவதாரு, சீந்திற்கொடி, முதியார் கூந்தல், அமுக்கராக்கிழங்கு, தகரம், வெட்டிவேர், கோஷ்டம், இவைகளின் கஷாயம் 4 பங்கு, நல்லெண்ணெய் ஒரு பங்கு, பசுவின் பால் 4 பங்கு, தயிர் ஒரு பங்கு, காடி ஒரு பங்கு, நன்னாரி

வேர், எள்ளு, தேவதாரு, சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், சந்தனம், பெருங்காயம், பால் முதுக்கன் கிழங்கு, அமுக்கராக் கிழங்கு, தகரவிதை, தினை, கோவைக்கிழங்கு, மூக்கரட்டைவேர், தண்ணீர் விட்டான் கிழங்கு, திரிபலை, இந்துப்பு, கச்சோரம், சிறு நாகப்பூ, ஏலரிசி, விலாமிச்சைவேர், மஞ்சிட்டி, கோஷ்டம், குங்குமப்பூ, தாமரைவளையம், அழிஞ்சில் வேர், வசம்பு, நெரியரிசிப் பால், செஞ்சந்தனம், சதகுப்பை, முதியார்கூந்தல் வேர், ஸரள தேவதாரு, அகில், குக்குலு, புங்கம்பட்டை, ஆவல்பட்டை, மருதாணி இவை கல்கம், இவைகளைக் காய்ச்சி எடுத்த தைலம் உள்வெளி உபயோகத்தாலும் நஸ்யம், எண்ணெய்க்குளி, பிசு பஸ்தி முதலியவைகளாலும் குல்மம், சூலம், அந்திரவிருத்தி, பாண்டு, ப்லீஹம் இவைகளிலும், எல்லாவித வாதவியாதிகளிலும் நல்ல குணம் கொடுக்கிறது.

வாதவியாதியில் சிகித்ஸை முறை

ஆதியில் மூன்று ஐந்து அல்லது ஏழு நாட்கள் எண்ணெய் தேய்த்து பிறகு வேது பிடிக்கச்செய்து மிருதுவான விரேசனம் கொடுத்தும் அதிகமான வாயுவைக் குறைத்து கஷாயம் பானம் பத்திய உணவு முதலியவைகளைக்கொண்டு கிரமமாக வாத சமனம் செய்யவேண்டும்.

வேதுபிடிக்க: ஆமணக்கிலை, மாவிலங்கை இலை, எருக்கிலை, இவைகளைப்போட்டுத் தயாரித்த வென்னீர் கொண்டு வேது பிடிக்கலாம். சூடான காடி விட்டும் வியர்வை எழச் செய்யலாம் சூடான அறுபதாங் குருவை அரிசி உருண்டையாலும் ஒத்தடம் கொடுக்கலாம்.

முருங்கையிலை, புளியிலை, எருக்கிலை, கருநொச்சியிலை, மாவிலங்கையிலை, ஆமணக்கிலை, இவைகளைச் சிதைத்து எண்ணெய் விட்டுத் தேங்காயைத் துருவிச் சேர்த்து வாட்டி வதக்கி துணியில் கிழிகட்டி ஒத்தடம் கொடுக்கலாம். கிழி ஆறி விட்டால் மறுபடியும் சூடான எண்ணெய்ப் பாத்திரத்திலுள்ள எண்ணெய்யில் தோய்த்துத்தோய்த்து ஒத்தடம் கொடுக்கலாம்

லகுவான மலசுத்திக்கு: கடுக்காய், காஞ்சூரிவேர், ஆமணக்கு வேர், சீந்திற்கொடி இவைகளைக் கஷாயம் வைத்து சர்க்கரையும் இந்துப்பும் சேர்த்துச் சாப்பிட மிருதுவாக மலம் இளகி வெளியாகும்.

ஆவல் துளிர், திராக்ஷைப்பழம், கடுக்காய், ஓமம், இவைகளைக் கஷாயம் வைத்து சர்க்கரையும் இந்துப்பும் அல்லது ஆமணக் கெண்ணெய் சேர்த்துச் சாப்பிடலாம். சிற்றாமுட்டிவேர் கருங் குறிஞ்சிவேர், வெண்குறிஞ்சிவேர், சதகுப்பை, தேவதாரு, முன்னைவேர், ஜீரகம் இவைகளின் கஷாயம் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட நல்லது. தசமூலம், சிற்றாமுட்டிவேர், தேவதாரு, முருங்கைவேர், சிறுதேக்கு இவைகளின் கஷாயத்தைத் திப்பிலித் தூளும் தேனும் மேம்பொடியாகச் சேர்த்துச் சாப்பிட நல்லது.

ராஸ்னாதி கஷாயம்: சித்தரத்தை, கீழாநெல்லி, செவ்யம், ஆடாதோடைவேர், அகில், பூலாங்கிழங்கு வேர், நெல்லிக்காய், கருங்குறிஞ்சிவேர், கல்லூர்வஞ்சிவேர், வரள்மஞ்சள், கொடிவேலி வேர், சுக்கு, சிறுதேக்கு புஷ்கரமூலம், பேய்புடல், தசமூலம், தேவதாரு. இவைகளின் கஷாயம் இந்துப்பு திப்பிலி இவைகளின் சூர்ணம் சேர்த்துச் சாப்பிட எல்லா வாத வியாதிகளும் சமன மடையும்.

விதார்யாதிகண கஷாயம் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடுதல் நல்லது.

வாதவியாதி சிகித்ஸை

ஆக்ஷேபவாதத்தில்: அடபதியன் கிழங்கு, காகோலி, க்ஷீரகா கோலீ, மேதா, மஹாமேதா, ஜீவகம், ருஷபகம், (இவை ஆறும் கிடைக்காவிடத்து முறையே அமுக்கராக் கிழங்கு, சீமை அமுக் கராக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்கு, நிலபபனைக் கிழங்கு, ஸாலாமிசிரி சேர்க்கவும்.) அதிமதுரம், காட்டுளுந்துவேர், காட்டுப் பயறுவேர் இவைகளின் கஷாயத்துடன் க்ஷீரபலா தைலம் அல்லது தான்வந்தர தைலம் சேர்த்துச் சாப்பிட நாளாகாத ஆக்ஷேபகம் குணமாகும்.

கோவைவேர், தண்ணீர்விடடான் கிழங்கு, அடபதியன் கிழங்கு, ஜீவகம் ருஷபகம், சிற்றாமுட்டிவேர் இவைகளாலான கஷாயத்திலும் க்ஷீரபலா அல்லது தான்வந்தர தைலம் சாப்பிட நல்லது.

ஹனுஸ்தம்பத்தில்: தண்ணீர்விட்டான் கிழங்கு, கோவை வேர், அடபதியன் கிழங்கு, அரத்தை, தேவதாரு, அதிமதுரம், சிற்றாமுட்டிவேர், பேராமுட்டிவேர், யானைக் குருந்தோட்டிவேர், பூலாங்கிழங்கு, கோரைக் கிழங்கு, நன்னாரி இவைகளின் கஷாயத் துடன் க்ஷீரபலா தைலத்தை இரவு சாப்பாட்டிற்குப் பின் சாப்பிட

தாவடை ஸ்தம்பித்திருப்பதைப் போக்கும். வாதாசனித் தைலம் அல்லது தான்வந்தர தைலம் மேல் தடவலாம், புஷ்கர மூலத்தைத் தூள்செய்து வெண்ணெய் சேர்த்துப் புரட்டலாம். (ஹனுஸ்தம்பம் என்பது திறந்த வாய்மூட முடியாமலும் மூடியவாய் திறவாமலும் ஸ்தம்பித்துப் போவதாகும்.)

ஊருஸ்தம்பத்தில் : கடுகை மோர் விட்டரைத்து கள்ளித் தண்டின் நடுவே குடைந்து செலுத்தி, மூடி மண்சீலே செய்து வராட்டியின் நடுவில் வைத்து எரித்து மண் வெடித்ததும் எடுத்துக் கடுகைப் பிரித்தெடுத்துக் கள்ளியிலேச்சாற்றில் அரைத்துத் துடையில் அடிக்கடி பூசி வர ஊருஸ்தம்பம் (துடைகள் மரத்துப்போதல்) நீங்கும். எண்ணெய் தடவி ஒத்தடம் கொடுத்தல் செய்யத்தக்கதல்ல. கபமும் ஆமமும் மிகுந்துள்ள நிலேயில் ஏற்படுவதால் ஸ்னேஹ ஸ்வேதங்களால் லாபம் ஏற்படாது.

சுக்கு, கடுகு, வில்வவேர், மாவிலங்கம் பட்டை, இவைகளேக் காடி விட்டரைத்து அடிக்கடி பூசி வர நல்லது.

புங்கின்பட்டை எருக்கம்பட்டை கடுகு, முருங்கப்பட்டை, தேவதாரு, சுக்கு, அரளிவேர் இவைகளேக் காடி விட்டரைத்துக் கொதிக்க வைத்து அடிக்கடி போட நல்லது.

கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, பூலாங்கிழங்கு, கடுகு இவைகளேப் பசுவின் மூத்திரத்தாலரைத்துப் பூச நல்லது.

பலாஸஹசராதி கஷாயத்தில் திப்பிலியும் ஜீரகமும் தூள் செய்து சேர்த்துத் தேன்விட்டுச் சாப்பிட நல்லது.

ஸிராக்ரஹத்தில் ரஸ தைலம் : ஆட்டுக்காலே ரோமத்தையும் தோலேயும் நீக்கி 4 கிலோ எடுத்து இடித்து 60 லிட்டர் ஜலத்தி லிட்டு 15 லிட்டர் மீதமாகக் கஷாயமிட்டு அதையும் 1 கிலோ சிற்றுமுட்டி வேர், கல்கமாகவும், பால் 10 லிட்டர் சேர்த்து நல்லெண்ணெய் 2½ லிட்டர் காய்ச்சி எடுத்த தைலம் மேல் பூச மிகவும் நல்லது.

சிற்றுமுட்டி வேர், கோதுமை, மூக்கரட்டை வேர், நிலப் பனேக்கிழங்கு, தேவதாரு, ஜீரகம் இவைகளின் கஷாயம் ஸிராக்ர ஹத்தில் நல்லது.

[ஸிராக்ரஹம் என்பது உள் நரம்புகளில் ஏற்படும் பிடிப்புடன் கூடிய வலி.]

பாஹ்யாயாமத்தில் : சிற்றுமணக்கெண்ணெயும் வெண்ணெய்யும் சேர்த்து கல்வத்திலிட்டு உரைத்து அதிலுள்ள ஜலாம்சம் காய்ந்ததும அதைத் தலையில் ததும்பத் தடவிக் கொண்டிருக்க பாஹ்யாயாமம் குறையும். ஜலாம்சம் நீக்கிய வெண்ணெய்யுடன் பாலில் அரைத்த சிற்றுமுட்டி வேரைக் கலக்கி தலையில் பூசிக் கொள்ளலாம். சென்னிநாயகத்தின் சூர்ணத்தை சிற்றுமணக் கெண்ணெய்யும் கூட்டி உரைத்துத் தலையில் தடவிக்கொள்ளலாம். தலையைத்தவிர மற்ற அங்கங்களில் ரஸ தைலம் தடவி இரவும் பகலும் எண்ணெய் பாத்தியில் படுத்திருக்கலாம். ராஸ்னாதி கஷாயம் வைத்து அதில் கர்பூரமும் உள்ளிப்பூண்டுச்சாறும் சேர்த்து சாப்பிடச் செய்யலாம்.

பாஹ்யாயாமம் என்பது உடம்பை முதுகுப் பக்கமாக வில்லைப் போல் வளைக்கும் தனுர்வாதமாகும். இதில் பற்களிலும் முகத்திலும் நிறம் மாறி அங்கங்கள் தளர்ந்து நினைவில்லாமல் வியர்த்துக் கொண்டிருக்கும் நோயாளிக்கு சிகித்ஸை செய்வதால் லாபமில்லை.

அந்தராயாமத்தில் : உடம்பை மார்பு பக்கமாக உள்புறமாக வில்லைப்போல் வளைக்கும் தனுர்வாதமிது. இது மிகவும் கஷ்ட ஸாத்யம். மிகுந்த சிரமத்துடன் சில சமயம் குணம் காணலாம். இதிலும் பாஹ்யாயாம சிகித்ஸையே போதுமானது.

(தொடரும்)

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்

N. வைத்யநாதன், R. M. P.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

இம்ப்காப்ஸ்

புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூலகளில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாக்கிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்

impcops

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.

அடையார், சென்னை 20.

விற்பனை நிலையங்கள்: 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, ஸொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2 Printed at Githa Press, Tiruchirapalli-2.